1987 நவம்பர் 16]

நகரப் பேருந்துகளின் தூரத்தை அதிகரித்தல்.

131—(*வினா எண் 14360) திரு. கி. வெங்கடாசலம் மற்றும் திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நகரப் பேருந்துகள் 30 கி. மீ. தூரம் இயக்கப்படுவதை 40 கி.மீ. ஆக உயர்த்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து இம்முறை அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இச் செயற் குறிப்பை அரசு நன்கு பரிசீலித்த பிறகு, தூரத்தை அதிகரித்தல் உகந்ததல்ல என்று முடிவு எடுத்துள்ளது.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைத்தல்.

132—(*வினா எண். 14756) திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையங்களில் பயணிகள் வசதிக்காக வீடியோ கேசட் பிளேயருடன் கூடிய தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையங்களில், பயணிகள் வசதிக்காக வீடியோ காசட் பிளேயர் மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகள் சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் வைப்பதற்காக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு மதிப்பீட்டில் இந்த வீடியோ காசட் பிளேயர் வைக்கப் பட்டிருக்கிறது? இதனை மற்ற இடங்களுக்கும் விரிவுபடுத்த அமைச்சர் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் முக்கியமான சில பேருந்து நிலையங்களில் வைத்து, அதற்கு எப்படி பொதுமக்களுடைய வரவேற்பு இருக்கிறது என்பதைப் பார்த்து, மற்ற எல்லா இடங்களிலும் வைப்பதைப் பற்றி ஆலோசிக்கலாம். அதனுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு என்ற குறிப்பு இப்போது இல்லை. அந்தந்த பகுதிக்கு ஏற்ப, அங்குள்ள பரப்பளவிற்கு ஏற்ப எவ்வளவு தேவையோ அவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது.